# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>M.C.O.P. No.151/2023</u>

2024–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29–ஆம் நாள் வியாழன்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.3 வது** நபரின் வாக்குமூலம். (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாராயணன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | சாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

**<u>2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

நான் புகார் கொடுக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். சம்பவ இடத்தின் அருகே எனக்கு காடு உள்ளது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அரியலூர் , திட்டக்குடி ரோடு ஒரே நேரத்தில் இரண்டு பேருந்துகள் செல்லக்கூடிய அகலமான ரோடு என்றால் சரிதான். நான் விபத்தை 10, 12 அடி தூரத்தில் பார்த்தேன். இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களும் தலைகவசம் அணியவில்லை என்றால் ஒருவர் அணிந்திருந்தார். லாரியை 50 மீ தொலைவில் பார்த்தேன். லாரி ரோட்டின் கிழக்கு பகுதியில் வந்தது. இருசக்கர வாககம் ரோட்டின் மேற்கு பகுதியில் வந்தது. அந்த சமயத்தில் லாரி இருசக்கர வாகனம் தவிர வேறு வாகனங்கள் வரவில்லை என்றால் சரிதான். விபத்து நடுரோட்டில் தான் நடந்தது. விபத்து நடந்த மாதம் பங்குனி

மாதம் காட்டில் வேலை எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றால் சரியல்ல. இறந்தவர் எனக்கு சொந்தம் இல்லை. இறந்தவரின் அப்பா தான் இன்று சாட்சியம் அளிக்க என்னை அழைத்து வந்தார். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் சிறு வயது பையன்கள் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் தான் லாரி வந்தததை கவனிக்காமல் விபத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. மனுதாரருருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.